


ஹிஸ்புல்லா ஏன் தோன்றியது என்று பார்த்தோம். என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று பார்த்தோம். யார் யார் பெருந்தலைகள் என்றும் பார்த்தோம். இதையெல்லாம் விட முக்கியமான ஒரு சங்கதி, அந்த அமைப்பின் நிர்வாக அடுக்கு எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது. மைக்ரோசாஃப்ட், டாட்டா, பிர்லா, ரிலையன்ஸ் என்று எந்த ஒரு பெரிய கார்ப்பரேட் நிறுவனத்தை வேண்டுமானாலும் ஒப்பிடுவதற்கு, எடுத்துப் பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நம்பவே முடியாது. இது ஒரு பயங்கரவாத இயக்கம்; அடி, உதை, வெட்டு, குத்து ஆசாமிகள் நிறைந்த அமைப்பு. ஈவு இரக்கமெல்லாம் பார்க்க மாட்டாதவர்கள் என்பதையும் இந்த கார்ப்பரேட் கட்டமைப்பையும் ஒரு நேர்க்கோட்டில் வைத்து நம்மால் சிந்திக்கவே முடியாது.

அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வின் முன்னாள் இயக்குனர் ஜார்ஜ் டெனட் ஒருசமயம், ''ஹிஸ்புல்லாவின் நிர்வாகக் கட்டமைப்பும், அவர்களது சர்வதேச நெட் ஒர்க்கும் அல் காயிதாவுக்கு நிகரானது. அப்படி இல்லை என்று யாராவது சொல்வார்களானால் என் பதில், அல் காயிதாவைக் காட்டிலும் சில படிகள் மேலானது என்பதுதான்'' என்று சொன்னார்.

ஜார்ஜ் டெனட் லேசுப்பட்ட ஆசாமி இல்லை. அவர் சொன்னபோது, இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதவர்கள் எல்லாரும், பின்னாளில் ஹிஸ்புல்லா தனது முழுநீளத் திருவிளையாடல்களை மிகத் தீவிரமாகச் செயல்படுத்த ஆரம்பித்தபோது, தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கவலைப்பட்டது, சமீபகால சரித்திரம்.

தனது ஒவ்வொரு திட்டத்திலும் ஹிஸ்புல்லா அபாரமான வெற்றி பெறுவது எப்படி என்கிற கேள்விக்கு ஒரே பதில், அந்த அமைப்பின் நிர்வாக ஒழுங்குதான். பிரமாதமான ஆயுத பலம் வாய்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது. பெரும்பாலும் திருட்டு சரக்குகள்தாம். இரண்டாம் உலகப்போர் காலத்து மிச்சம் மீதிகளைத்தான் மொத்தமாக எடைக்கு வாங்கிவந்து இன்றைக்கு வரை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நவீன ஆயுத பலத்தோடு ஹிஸ்புல்லாவின் பலம் உறை போடக் காணாது. ஆனாலும் தண்ணி காட்டுகிறார்கள் பாருங்கள், அதற்குக் காரணம் இந்த நிர்வாக ஒழுங்கு.

ஹிஸ்புல்லாவின் நிர்வாக அமைப்பு முறையை இதர தீவிரவாத அமைப்புகள் எதனுடனும் ஒப்பிடமுடியாது.

இயக்கத்தின் கட்டக்கடைசிப் போராளி ஒருத்தனின் செயல்பாட்டைக்கூட, செகரட்டரி ஜெனரல் நஸரல்லா விரும்பினால், நேரடியாகக் கவனிக்க முடியும். வேண்டாதபோது, ஜன்னலை இழுத்து மூடுவது போல மூடிவிட்டு, வேறு வேலையைப் பார்க்கப் போய்விடலாம்.

நஸரல்லாவுக்கு அடுத்தபடியாக துணை செகரட்டரி ஜெனரலாக ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் ஷேக் நயீம் காசிம் (Sheik Naim Qassem). இவரைப் பற்றி அதிகத் தகவல்கள் இதுவரை வெளிவந்ததில்லை. நஸரல்லா பங்குபெறும் அத்தனை மீட்டிங்குகளிலும் இவரும் உடனிருப்பார்.

இயக்கத்தின் இரண்டாவது பெரும் தலைவர் என்றபோதும் அன்பழகன், ஓ.பன்னீர்செல்வம் போலவே எப்போதும் அமைதி காப்பது இவரது ஸ்டைல்.

இந்த இரண்டு பேருக்கும் அடுத்தபடியாக 'முடிவெடுக்கும் குழு' என்றொரு அமைப்பு (Decision Making Council) வருகிறது. செயல் திட்டக் குழு, நீதிக் குழு, அரசியல் குழு, அரசியல் ஆலோசனைக் குழு, ஜிஹாத் குழு ஆகிய ஐந்து குழுக்களைச் சேர்ந்த தலைவர்கள் ஐந்து பேரும், இந்த முடிவெடுக்கும் குழுவின் உறுப்பினர்களாக வருவார்கள்.

இதில் நாம் ஏற்கெனவே பார்த்த இமத் ஃபயாஸ் மக்னியாவுக்கு (ஜிஹாத் குழுவின் தலைவர்) மட்டும் கொஞ்சம் மவுசு அதிகம். அவரது தலைக்கு அமெரிக்கா உள்பட பல்வேறு தேசங்கள் பல லட்சம் டாலர் விலை வைத்திருப்பது மட்டும் காரணமல்ல. நஸரல்லாவுக்குப் பிறகு, ஹிஸ்புல்லாவே அவரது கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்றொரு பேச்சு இருக்கிறது. ஒரு போராளி இயக்கத்தின் செயல்பாடுகள் அனைத்தின்மீதும் அவருக்கு உள்ள ஆளுமையே இந்த அந்தஸ்தைப் பெற்றுத் தந்திருக்கிறது.

இந்த ஐந்து குழுக்களின் கட்டுப்பாட்டில், பல்வேறு பிரிவுகள் வரும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, வெளியுறவுத் துறையும், கிறிஸ்துவ அமைப்புகளோடு உறவு பராமரிக்கும் துறையும் அரசியல் பிரிவுக்குள் அடக்கம்.

லெபனான் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் ஹிஸ்புல்லாவின் எம்.பி.க்கள் அனைவரும், இந்த அரசியல் குழுவின் தலைமைக்குக் கட்டுப்பட்டே இயங்குவார்கள்.

செயல்திட்டப் பிரிவு என்பது தெற்குப் பிரிவு, பேக்கா பள்ளத்தாக்குப் பிரிவு, பெய்ரூத் பிரிவு என்று மூன்று இடங்களில் பிரிந்து இயங்குவது. கல்வி நிலையங்கள் நடத்தும் பிரிவு, தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கவனிக்கும் பிரிவு, சமூக, கலாசார நடவடிக்கைகளை மேற்பார்வை பார்க்கும் பிரிவுகள் ஆகியவை இந்த அணியில் வரும்.

நீதிக் குழு, அரசியல் ஆலோசனைக் குழு இரண்டும் வேறு கிளைகள் இல்லாமல் நேரடியாக செகரட்டரி ஜெனரலின் கீழ் தனித்து இயங்கும்.

இறுதியாக ஜிஹாத் பிரிவு எனப்படும் ராணுவப் பிரிவு. ஆயுதம் வாங்குவது, பராமரிப்பது, போர்த்திட்டங்கள் வகுப்பது, போர்க்களத்தில் செயல்பாடுகளைக் கண்காணிப்பது, வெளிநாட்டு இயக்கங்களுடனான தொடர்புகளைப் பலப்படுத்துவது, லெபனானுக்கு வெளியே தாக்குதல் திட்டங்களை மேற்கொள்வது, அதற்காக ஹிஸ்புல்லாவின் பிற தேசத்துக் கிளைகளுடன் தொடர்புகொண்டு திட்டம் வகுத்தளிப்பது என்று ஏகப்பட்ட காரியங்களைச் செய்யும் குழு இது.

இந்த அனைத்துக் குழுக்களும் நேரடியாக நஸரல்லாவுக்கு ரிப்போர்ட் செய்யும் என்கிறபடியால், எந்த மூலையில் என்ன பிரச்னை என்றாலும், அடுத்த வினாடி விஷயம் தலைமைக்கு வந்துவிடும். ஆனால், அனைத்துப் பிரச்னைகளிலும் நஸரல்லா ஆலோசனை சொல்வதில்லை. அந்தந்தக் குழுத் தலைவர்களின் பொறுப்பு அது. ஆனால், தகவல் அளித்துவிடவேண்டியது அவசியம். குழுத் தலைவர்களால் தீர்க்க முடியாதபோது, முடிவெடுக்கும் பொதுக்குழுவுக்குப் பிரச்னை கொண்டுவரப்படும். அங்கும் பிரச்னை என்றால்தான் நஸரல்லா தீர்ப்பளிப்பார்.

ஹிஸ்புல்லாவில் உள்ள அத்தனை முக்கியத் தலைவர்களும் நன்கு படித்தவர்கள். மதக்கல்வி மட்டுமல்லாமல், பெரும்பாலானவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு அதிகம். கையில் ஒரு லேப்டாப் இல்லாமல் இவர்களில் யார் ஒருத்தரையும் பார்க்கவே முடியாது. ஒவ்வொரு தாக்குதல் திட்டத்துக்கும் மிகத் தெளிவான ப்ளூ ப்ரிண்ட் தயாரித்து, அங்குலம் அங்குலமாக அலசி ஆராயாமல் ஹிஸ்புல்லா இறங்குவதே இல்லை.

மிக மிக நெருக்கடியான சமயம்; உடனடியாகப் பதில் தாக்குதல் தொடுத்தாக வேண்டும் என்கிற நிலைமை வந்தால்கூட, அவசரத்தோடு அவசரமாக ஒரு ஐந்து நிமிடம் உட்கார்ந்து திட்டத்தை எழுதி மேலிடத்துக்கு அனுப்பி சம்மதம் பெறாமல், அங்கே ஒரு கொசு கூடத் துப்பாக்கி தூக்காது.

இப்படி அவசர காலப் பிரச்னைகளுக்கென்று, உடனடித் தகவல் பரிமாற்றத்துக்காகத் தனியொரு செயல்வீரர் குழு ஹிஸ்புல்லாவில் இருக்கிறது. இந்தக் குழு, மேற்சொன்ன ஐந்து குழுக்களுள் எது ஒன்றின் கட்டுப்பாட்டிலும் வராது. மாறாக, யுத்த களத்தில் இருக்கும் வீரர்களுக்கும் இயக்கத் தலைமைக்கும் நேரடித் தொடர்புப் பாலமாக இது செயல்படும். ஹிஸ்புல்லாவின் ஒவ்வொரு படைப்பிரிவிலும் இந்தச் செயல்வீரர் குழுவின் உறுப்பினர்கள் சிலர் எப்போதும் தயாராக இருப்பார்கள். சாட்டிலைட் போன், மொபைல் போன், வயர்லெஸ், இன்டர்நெட் சௌகரியங்கள் இவர்களிடம் உண்டு.

இந்த நவீன தொழில்நுட்பங்கள் அத்தனையுமே சொதப்பினாலும் கண்ணிமைக்கும் நேரத்தில், தலைமை அலுவலகத்துக்கு ஓடிச் சென்று விஷயத்தைச் சொல்லவோ, கட்டளை பெறவோகூட வசதி உண்டு. லெபனானின் தெற்கு எல்லையில் ஒவ்வொரு முந்நூறு மீட்டர் தொலைவுக்கும், ஒரு ஹிஸ்புல்லா தகவல் தொடர்பகம் உண்டு. அப்பழுக்கில்லாத ஆபீஸாகத்தான் அது இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. ஒரு சாதாரண டீக்கடைக்காரராகக் கூட இருப்பார். தகவல் சொன்னால் போதும், அடுத்த முந்நூறு மீட்டர் தொலைவில் இருக்கும் இன்னொரு கசாப்புக் கடைக்காரருக்கு அவர் சைக்கிள் எடுத்துப் போய்ச் சொல்லிவிடுவார். அவர் இன்னொரு முந்நூறு மீட்டர் போய் வேறொரு லாரி க்ளீனரிடம் சொல்வார்.

தெற்கு லெபனானில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும், யாரோ ஒருவருக்கு ஹிஸ்புல்லாவின் தொடர்பு கண்டிப்பாக இருக்கும். அவர் நேரடி ஹிஸ்புல்லாக்காரராக இருந்தாக வேண்டுமென்ற அவசியமே இல்லை. அனுதாபியாக இருந்தால்கூடப் போதும்.

ஹிஸ்புல்லா அவர்களுக்கு அத்தனை செய்திருக்கிறது.

புரிவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது அல்லவா? என்னதான் எல்லை காக்கும் ஐயனார் என்றாலும், ஒரு பயங்கரவாத அமைப்புக்கு மக்கள் ஆதரவு எத்தனை தூரம் நிரந்தரமாக இருக்கும் என்கிற சந்தேகம் எழுகிறது அல்லவா? எப்போதும் யுத்தம், எப்போதும் பாதுகாப்பற்ற சூழ்நிலை, எப்போதும் அவசர கதி என்றால், எப்போதாவது அலுப்பு வரவே செய்யும் என்று தோன்றுகிறது அல்லவா?

ஹிஸ்புல்லா விஷயத்தில், லெபனானியர்களுக்கு அப்படியொரு அலுப்போ, சலிப்போ, ஏமாற்றமோ வராது. காரணம், நாம் முன்பே பார்த்த ஹிஸ்புல்லாவின் அந்த அரசியல் பிரிவு செய்யும் காரியங்கள். படிப்பதற்குக் கொஞ்சம் மிகையாகக் கூடத் தோன்றலாம். ஆனால் இது, அப்பட்டமான உண்மை. லெபனான் நாடாளுமன்றத்தில் இருக்கும் ஹிஸ்புல்லா எம்.பி.க்களும் சரி, ஹிஸ்புல்லாவின் அரசியல் பிரிவின் அத்தனை அதிகாரிகளும் ஊழியர்களும் கடைமட்டப் பிரகஸ்பதிகளும் சரி, சற்றும் ஊழலற்ற, ஒழுங்கீனமற்ற, தன்னலமற்ற மக்கள் பணியில் அப்படித் தம்மை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓர் அரசாங்கம் முனைந்து செய்யவேண்டிய எத்தனையோ பல காரியங்களை, ஹிஸ்புல்லாவின் அரசியல் தொண்டர்கள் துணிந்து துண்டேந்தி, பணம் சேகரித்து, மக்களுக்காகத் தனிப்பட்ட முறையில் தாங்களே செய்து கொடுத்திருக்கிறார்கள்.

சமீபத்திய யுத்தத்தின் இறுதியில் கூட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஹிஸ்புல்லா செய்த உதவிகளைத் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் பார்த்திருக்கலாம். இது அரசியல் ஸ்டண்ட் இல்லை. கண்டிப்பாக இல்லை. உண்மையிலேயே லெபனான் மக்களின் நலனுக்காகப் பாடுபடும் அமைப்பு அது. இதனால்தான் ஹிஸ்புல்லாவை ஒரு பயங்கரவாத இயக்கமாக அறிவித்துத் தடை செய்திருக்கும் பல மேற்கத்திய தேசங்கள் கூட, அதன் ‘அரசியல் பிரிவு நீங்கலாக’ என்று ஒரு

சிறப்புப் பின்குறிப்பு அளித்திருக்கின்றன.

ஒரு வரியில் சொல்வதென்றால், ஓர் அரசியல் இயக்கமாக லெபனானில் ஹிஸ்புல்லா பெற்றிருக்கும் பிம்பம், சர்வதேச அளவில் ஒரு தீவிரவாத இயக்கமாக அது பெற்றுள்ள பெயரைக் காட்டிலும் மிகப் பெரிது. இதனால்தான் லெபனான் மக்கள் ஹிஸ்புல்லாவின் எந்த ஒரு தாக்குதல் நடவடிக்கையையும் விமர்சனமில்லாமல் அல்லது குறைந்தபட்ச விமர்சனத்துடன் ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

அப்படியானால், லெபனானில் ஏன் ஹிஸ்புல்லாவால் ஆட்சியமைக்க முடியவில்லை? அரசியல் முகம் இருக்கிறது, அதுவும் நல்ல முகம் வேறு. மக்கள் ஆதரவும் இருக்கிறது. தேர்தலிலும் நிற்கிறார்கள் _ இத்தனை இருந்தும் ஏன் இதுவரை அவர்களால் அங்கே ஆட்சியமைக்கும் அளவுக்கு பலம் பெற முடியவில்லை?

இந்த இடத்தில் இந்தக் கேள்வி உங்களுக்கு அவசியம் வரவேண்டும். வராவிட்டாலும் பாதகமில்லை. விளக்கம் தரவேண்டியது இங்கே அவசியமாகிறது.

லெபனானின் அரசியல் நிர்ணய சட்டம் விதித்திருக்கும் சில கண்டிஷன்களும், அந்த தேசத்தில் இருக்கும் ஒருவிதமான கதம்ப சமூகச் சூழலுமே இதற்குக் காரணம்.

இத்தனைக்கும் ஜனநாயகம் ஜோராகத் தழைக்கும் தேசம்தான். நம் நாட்டைப்போலவே நாடாளுமன்ற ஜனநாயகம். அதிபர், பிரதமர், அமைச்சரவை, கூட்டணி ஆட்சி, குட்டைக் குழப்பல்கள், குதிரை பேரம் என்று அத்தனை கல்யாண குணங்களும் அங்கும் இருக்கத்தான் செய்கிறது.

ஒரே ஒரு வித்தியாசம். ஆனால், கொஞ்சம் பெரிய வித்தியாசம்.

நம் நாட்டிலெல்லாம் நூற்றுக்கணக்கான தொகுதிகளில் ஒரு சில ரிசர்வ் தொகுதிகள் இருக்கும். தலித் தொகுதிகள். ஆதிவாசித் தொகுதிகள் இந்த மாதிரி. அந்தந்தப் பிராந்தியத்தின் அரசியல், சமூகச் சூழ்நிலை கருதி இத்தகைய ரிசர்வ் தொகுதிகள் ஏற்படுத்தப்படுகின்றன இல்லையா?

லெபனானில் உள்ள அத்தனை நாடாளுமன்றத் தொகுதிகளுமே ரிசர்வ் தொகுதிகள்தான். அதாவது ஒரு தேசமே ரிசர்வ் தொகுதிகளால் ஆனது!

புரியவில்லை அல்லவா? கஷ்டமே இல்லை. விளக்கிவிடலாம்.